## அர்மீனியா



# ஏதோ ஓர் எண்ணுக்கு

*ஏழாம் நாளில், 'நான் எந்த எண்ணுக்கு அழைக்கவேண்டும்' என்று ஜெபித்தார்.*

அர்மீனியாவில் இயேசுவின் அன்பை மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ள லையுபோவ் மிகவும் விரும்பினாள். ஆனால் எப்படி என்றுதான் தெரியவில்லை.

தொலைபேசி மூலம் இயேசுவின் அன்பைச் சொல்லுமாறு ஒரு நண்பர் அறிவுரை சொன்னார். அது 1995ம் வருடம்; முன்னாள் சோவியத் யூனியனில் அப்போது அலைபேசிகள் கிடையாது. அதனால் தொலைபேசி இணைப்பு வழியாகத்தான் தொடர்புகொள்ள வேண்டும்.

முன்பின் தெரியாதவர்களிடம் தொலைபேசியில் பேசி லையுபோவுக்குப் பழக்கமில்லை. எங்கிருந்து ஆரம்பிப்பது என்றும் தெரியவில்லை. தான் தொலைபேசி மூலம் சாட்சியை அறிவிப்பது தேவனுடைய சித்தம்தானா என்று கேட்டு ஏழு நாட்கள் ஜெபித்தார்.

அவர் ஜெபித்தபோது, முன்பின் தெரியாதவர்களிடம் பேசுவதற்கான ஓர் ஆவல் அவரது உள்ளத்தில் உருவானது. ஏழாம் நாளில், 'நான் எந்த எண்ணுக்கு அழைக்க வேண்டும்' என்று ஜெபித்தார். பிறகு, எதேச்சையாக ஓர் எண்ணை அழைத்தார்.

"ஹலோ, நான் உங்களுக்கு வேதாகம விஷயங்களைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன்" என்று கூறினார்.

அதற்கு எதிர்முனையில் அவர் உணர்ந்த பிரதிவினையும், கேட்ட பதிலும் ஊக்கமளிப்பதாக இல்லை. சிலர் விரக்தியோடு காணப்பட்டார்கள். வேறு சிலர் கவனமாகக் கேட்டார்கள்; ஆனால் வேதாகம காரி

யங்களை அறிந்துகொள்ள விரும்பவில்லை.

பிறகு ஓல்கா என்கிற வயதான பெண்மணி ஒருவரை லையுபோவ் அழைத்தார். அவர் வேதப்பாடம் படிக்க ஒத்துக்கொண்டார்.

ஓல்காவுக்கு லையுபோவுடன் தொலைபேசியில் பேசுவது பிடித்திருந்தது; இரண்டு பெண்களும் தொடர்ந்து பேசிக்கொள்ள ஆரம்பித்தார்கள். ஒருமுறை பேசியபோது, தன்னுடைய மாமியார் சுகமில்லாமல் இருப்பதாகவும், அவர் கிறிஸ்தவரல்ல என்றும் ஓல்கா சொன்னார்.

“உங்கள் மாமியாரிடம் இயேசுவைப் பற்றிச் சொல்லுங்கள். இயேசுவை தன் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ளும்படி அவரிடம் கூறுங்கள்” என்று லையுபோவ் சொன்னார்.

ஒரு சில நாட்களுக்கு பிறகு லையுபோவ் தொலைபேசியில் அழைத்தபோது, தன் மாமியார் மரித்துவிட்டதாக ஓல்கா சொன்னார். ஆனால் நம்பிக்கை பெற்றவராக மரித்ததாகக் கூறினார். “நாம் பேசின அன்றைக்கே அவரிடம் சென்று, இயேசுவைப்பற்றி அவரிடம் சொன்னேன். இயேசுவை தன் சொந்தஇரட்சகராகஏற்றுக்கொண்டு, தன் பாவங்களை மன்னிக்கும்படி கேட்டுக்கொண்டார். அன்று இரவு, மரித்துப்போனார்” என்று சொன்னார்.

இரண்டு வருடங்கள் கழித்து, ஓல்கா இயேசுவை தன் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு, இன்னொரு உறவினருடன் சேர்ந்து ஞானஸ்நானம் பெற்றார்.

லையுபோவுக்கு மகிழ்ச்சியாக இருந்தது. ஓல்கா, அவரது மாமியார், இன்னொரு உறவினர் ஆகியோரை தொலைபேசி ஊழியம் மூலமாகவே கிறிஸ்துவுக்காக ஆயத்தம் செய்யமுடிந்தது.

தன் தொலைபேசி ஊழியத்தை லையுபோவ் தொடர்ந்தார். ஒருசமயம் தேவனுடைய பெயரைச் சொன்னதுமே பேசிக்கொண்டிருந்தவர் அழ ஆரம்பித்தார். “என் மகளுக்கு சுகமில்லாமல் இருக்கிறது. பயங்கர வலிப்பு நோயால் பாதிக்கப்பட்டுள்ளார். குணமாவாள் என்கிற நம்பிக்கையே இல்லாமல் போய்விட்டது. விரும்பினால், அவளிடம் பேசுங்கள்” என்று கூறினார்.

லையுபோவ் பதில் சொல்லுவதற்கு முன்னரே, தொலைபேசியை தன் 23 வயது மகளான ஆலாவிடம் கொடுத்தார்.

லையுபோவ் பேசினார், ஆனாலும் ஆலா பதிலளிக்கவில்லை. மறுமுனை அமைதியாகவே இருந்தது. மறுமுனையில் பேசுகிறவர் அமைதியாகவே இருந்து, தான் மட்டும் பேசி லையுபோவுக்கு பழக்கமில்லை; எனவே உதவிவேண்டி ஜெபித்தார்.

அடுத்தமுறைஅழைத்தபோது, தான் எலன் ஒய்ட் எழுதின ஆரம்பக்கால எழுத்துக்கள் எனும் புத்தகத்தை வாசிப்பதாகவும், அதில் புதிய பூமி குறித்த விளக்கம் தனக்குப் பிடித்திருந்ததாகவும் ஆலாவிடம் சொன்னார். ஆனால் ஆலா பேசவில்லை.

புதிய பூமியில் தேவன் தம்

பிள்ளைகளுக்காக ஆயத்தம்பண்ணுகிற அழகான தோட்டத்தை பற்றி லையுபோவ் விளக்கினார்.

பிறகு, சோவியத்காலத்தில் அழகான தோட்டம் போல வரையப்பட்ட ஒரு பொம்மைப்படம் லையுபோவுக்கு நினைவிற்கு வந்தது.

"அந்த வரைபடம் உனக்கு ஞாபகமிருக்கிறதா?" என்று லையுபோவ் கேட்டார்.

மறுமுனையில் மகிழ்ச்சியான சிரிப்பு சத்தம் கேட்டது. லையுபோவுக்கு ஆச்சரியமாக இருந்தது. ஆலாவிடமிருந்து கேட்ட முதல் சத்தம் அதுதான்.

"உனக்கு சிரிக்கத் தெரிகிறது!" என்று ஆச்சரியத்தோடு சொன்னார். "அந்த பொம்மைப்படத்தில் உள்ளதைவிட மிகவும் அழகான ஒரு தோட்டத்தை தேவன் ஆயத்தம் பண்ணி வருகிறார்" என்று கூறினார்.

லையுபோவ் தொடர்ந்து புதிய பூமி பற்றியே பேசினார். பிறகு அந்த இணைப்பில் இன்னொரு கிளிக் சத்தம் கேட்டது; வேறொரு பெண் பேசினார்.

"மன்னிக்கவும், வெகுநேரமாக நீங்கள் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருக்கிறேன். நீங்கள் சொல்லுவது மிகவும் சுவாரஸ்யமாக இருக்கிறது" என்று அந்தப் பெண் சொன்னார்.

ஆலா வாய்விட்டுச் சிரித்தாள். மிகவும் பூரிப்போடு பேசினாள். தங்கள் இணைப்பை யாரோ இரகசியமாக ஒட்டுக்கேட்டதை நினைத்து அவளுக்கு சிரிப்பாக வந்தது.

பிறகு, ஆலாவின் அம்மா அந்த இணைப்பில் வந்தார். ஆலா பேசுவதைக் கேட்டு அவருக்கு மகிழ்ச்சியாக இருந்தது. அவளைச் சிரிக்க வைத்த விஷயம் என்னவென்று கேட்டார்.

இவ்வாறுதான் ஆலாவும், அவளது அம்மாவும், அவர்களுடைய உறவினரும் லையேபோவின் வேதப்பாட ஆராய்ச்சியில் கலந்துகொள்ள ஆரம்பித்தார்கள்.

ஒரு சில வாரங்கள் கழித்து, இன்னொரு ஆணும் அந்த தொலைபேசி இணைப்பில் சேர்ந்தார்.

ஒருநாள் வேதப்பாடம் நடந்துகொண்டிருந்த போது, "என்னை மன்னிக்கவும், நீங்கள் பேசுவதைக் கேட்டுக்கொண்டிருக்கிறேன். மிகவும் சுவாரஸ்யமாக இருக்கிறது" என்று சொன்னார்.

தான் வேறொரு கிறிஸ்தவ சபையைச் சேர்ந்த தலைவரென்று கூறினார். இவ்வாறு லையுபோவின் வேத ஆராய்ச்சியில் நான்கு பேர் கலந்துகொள்ள ஆரம்பித்தார்கள்.

சில நாட்கள் கழித்து, ஆலா இயேசுவை தன் இரட்சகராக ஏற்றுக்கொண்டு, ஞானஸ்நானம் பெற்றாள். வலிப்பு பிரச்சனைகள் நீங்கியது; இன்று உண்மையுள்ள அட்வென்டிஸ்ட் விசுவாசியாக இருக்கிறாள்.

தொலைபேசி மூலம் சாட்சி சொல்ல உதவி செய்ததற்காக லையுபோவ் தேவனைத் துதிக்கிறாள். "தொலைபேசி மூலமாக மக்களுக்கு, குறிப்பாக முன்பின் தெரியாதவர்களுக்குச் சேவைசெய்ய உதவிய தேவனுக்கு நன்றி" என்றாள்.